**Copy of Deposition**

## சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

**அ.வ.எண்.145/2024 நாள்:17.11.2025**

**வா.சா:– 1ஆறுமுகம் ஆஜர், சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்):–**

பிரதிவாதியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் பக்கத்து ஊர்காரர். நாங்கள் இருவரும் தொழில்முறை கூட்டாளிகள் என்றால் இல்லை. அவர் எனக்கு நன்கு பழக்கம். எங்களுக்குள் வரவு, செலவு உண்டா என்றால் உண்டு. அவருக்கு வீடு, தோட்டம் உண்டா என்றால் வீடு உள்ளது. தோட்டம் கூட்டாக வாங்கினோம். யார், யார் கூட்டாக வாங்கினோம் என்றால் நானும் பிரதிவாதி சின்னச்சாமியும் வாங்கினோம். இருவருக்கும் தனித்தனி பத்திரம். அதன்படி நாங்கள் கூட்டாக அனுபவித்து வருகிறோமா என்றால் இல்லை. நான் என்னுடைய பாகத்தை 3ம் நபருக்கு விற்றுவிட்டேன். பிரதிவாதி அவருடைய பாகத்தை விற்பனை செய்துவிட்டாரா என்றால் அது எனக்கு தெரியாது. ரியல் எஸ்டேட் மூலம் லாபம் அடைவதற்காகத்தான் நாங்கள் இருவரும் அந்த இடத்தை கூட்டாக வாங்கினோமா என்றால் இல்லை. மேற்படி பூமி பிரிவுபடாத பூமிதான் என்றால் பொதுவில் 2/3 பாகம் எனக்கு. 1/3 பாகம் அவருக்கு. இருவருக்கும் வேறு வேறு பத்திரம். இரண்டு கிரையங்களும் ஒரே நாளில் நடந்ததா என்றால் ஆமாம். யாருடைய கிரையம் முதலில் கொடுக்கப்பட்டது என்றால் என்னுடைய கிரையம். பத்திரங்கள் தனித்தனியாக இருந்தாலும், பொதுவில்தான் அனுபவித்து வந்தோம் என்றால் செக்குபந்தி கண்டு எழுதவில்லை. பொதுவில்தான் அனுபவித்தோம். என்ன பயிர் செய்தேன் என்றால் மஞ்சள் பயிர் செய்தேன். உத்தேசமாக வரப்பு கட்டி அனுபவித்தேன். எத்தனை ஆண்டுகள் ஓட்டினேன் என்றால் என்னுடைய காட்டை சுமாராக 10 மாதங்கள் ஓட்டினேன். பாகபிரிவினை செய்ய எதாவது முயற்சி செய்தேனா என்றால் இல்லை. எனது பாகத்தை விற்பனை செய்வதற்கு முன்பு பிரதிவாதியிடம் என்னுடைய பாகத்தை கிரையம் வாங்கி கொள்கிறாரா என்று கேட்டேனா என்றால் இல்லை. பொதுவில் இருவரும் இணைந்து கிரையம் பெற்றுவிட்டு எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டதால் விற்றுவிட்டேனா என்றால் இல்லை. பிரச்சனை ஏற்பட்டு வாதியும், அவரது மனைவியும் பிரதிவாதியிடம்

சண்டையிட்டு பிரதிவாதி மலையம்பாளையம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் எனது பணம் ரூ.3,50,000/-த்தை ஏமாற்றுவதற்காக பொய் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். விசாரித்து எழுதி வாங்கினார்களா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுமாறு சொன்னார்கள். அந்த புகாரை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். மேற்படி புகாரை நீதிமன்றத்திற்கு வரவழைத்து ஆவணமாக குறியீடு செய்வதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லையா என்றால் இல்லை. காசோலை திருப்பப்பட்ட பிறகுதான் இந்த புகார் கொடுத்தாரா என்றால் திருப்பப்பட்டதாக குறுஞ்செய்தி வந்தபிறகுதான் என் மீது பொய் புகார் கொடுத்தார். 10.02.2021ம் தேதிதான் கிரையம் வாங்கினோம் என்றால் ஆமாம். 2 மாதத்திலேயே பிரதிவாதியிடம் மனக்கசப்பு ஏற்பட்டு பேச்சுவார்த்தையை நிறுத்திவிட்டேன் என்றால் அப்படி எல்லாம் இல்லை. காசோலை திருப்பப்பட்ட பிறகு பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். உரிமையியல் வழக்கு தொடுப்பதாக கூறி அறிவிப்பு கொடுத்தேனா என்றால் ஆமாம். மேற்படி சட்ட அறிவிப்பில் சிவில் வழக்கு தொடுப்பதாக அறிவிப்பில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

**பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

| |
|---|
| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.11.17 13:58:07 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |